**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

03.04.2025

C.O.S. No. 3/2024

P.W.1 திரு. சுரேஷ்குமார்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (4 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

நான் அரசு பணிகளை எடுத்து செய்வதற்கு அரசு துறைகளிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ காண்டிராக்டராக பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட கட்டுமானத்திற்கு முன்பாக அது போன்ற கல்லூரி, மருத்துவமனை அல்லது பெரிய கட்டிடங்கள் எதையும் கட்டியுள்ளேனா என்றால் கட்டியுள்ளேன். ஐந்து மாதங்களில் பணி முடிக்க வேண்டும் என ஒப்பந்தம் போட்டேனா என்றால் இல்லை. டெண்டர் Certificate ல் அவர்களாக அவ்வாறு குறித்து கொண்டுள்ளார்கள்.

மற்ற சங்கதிகளை குறித்து 1 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.